Tourism Development Corporation

*263 Q.—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Tourism Development Corporation in the State has proposals under its consideration to launch a scheme of "Own Your Home" in hill tracts; and

(b) if so, the details thereof?

சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மலைப் பகுதிகளில் 'சொந்த வீடு கட்டிக் கொள்' திட்டத்தைத் துவங்கும் செயற்குறிப்புகள் எவையேனும் இம்மாநிலத்தில் உள்ள சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

Libraries in the Housing Colonies

@* 230. Q.—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether provision for the location of libraries has been made in the Housing Colonies of the State Housing Board in Madras;

(b) if so, the places where this provision has been made; and

(c) if not, the reasons therefor?

குடியிருப்புத் தொகுதிகளில் நூலகங்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையில் மாநில வீட்டு வசதி வாரியம் கட்டியுள்ள குடியிருப்புத் தொகுதிகளில் நூலகங்களை ஏற்படுத்துவதற்கான இட வசதி செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், எந்தெந்த இடங்களில் அத்தகைய வசதி செய்யப்பட்டுள்ளது?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

@ Postponed from the list of questions for 23rd August 1972.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1972 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ), (இ) & (உ) சாஸ்தா நகர், அசோக் நகர், கலைஞர் கருணாநிதி நகர், அறிஞர் அண்ணா நகர், பட்டினப் பாக்கம் ஆகிய வீட்டு வசதி வாரியத்தின் குடியிருப்புகளில் நூலகங்கள் ஏற் படுத்துவதற்காக வகை செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக ஒதுக்கப்பட்ட இடங்களுக்கான விலையை உள்ளூர் நூலக அதிகாரிகளே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

Centrally Sponsored Rural Housing Projects

@ * 321 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the State Goverment have requested to increase the allotment of financial aid for the centrally sponsored rural housing projects in this State during 1972; and

(*b*) if so, the details thereof?

மத்திய அரசுப் பொறுப்பேற்கும் கிராம வீட்டு வசதித் திட்டங்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972-ல் இம்மாநிலத்தில் மத்திய அரசு பொறுப்பேற்கும் கிராம வீட்டு வசதித் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி உதவியை அதிகப்படுத்து மாறு மாநில அரசு மத்திய அரசை வேண்டியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை. இம்மாநிலத்தில் மத்திய அரசு திட்டத்தின் கீழ் கிராமப்புற வீட்டு வசதித்திட்டம் இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Complaint about a Private Management High School at Pichanur.

* S.N. 1. Q.—PULAVAR O. ARIVUDAI NAMBI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any complaint about a Private Management High School at Pichanur, Coimbatore district, has been brought to the notice of the Government;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken by the Government thereon?

@ Postponed from the list of questions for 23rd August 1972.